[2nd March 1966

‘ இரயில்வே ’ மேம்பாலங்கள்

*151 கேள்வி.—திரு. எஸ். ஜே. ராமசாமி : கனம் உணவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா :—

(அ) கோடம்பாக்கத்தில் கட்டி முடிக்கப்பட்ட ரயில்வே மேம்பாலத்திற்கான மொத்த மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு ?

(இ) அதில் சென்னை மாநகராட்சியின் பங்குத் தொகையும் ரயில்வே இலாகாவின் பங்குத் தொகையும் முறையே எவ்வளவு ?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) & (*b*) The total estimated cost of the work is Rs. 42·40 lakhs, of which a sum of Rs. 3·40 lakhs being the cost of the Railway portion of the work was met by the Southern Railway and the balance of Rs. 39·00 lakhs, the cost of the road portion, was shared equally by the State Housing Board and the Government.

திரு. எஸ். ஜே. ராமசாமி : இந்தப் போக்குவரத்து மேம்பாலத்திற்கு ஆகும் செலவை ரயில்வே நிர்வாகமே ஏற்றுக்கொள்ள இந்த அரசாங்கம் ஏன் முயற்சி செய்யக் கூடாது என்று அறியவிரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமைய்யா : இப்போதுள்ள ஏற்பாட்டின்படி லெவல் கிராசிங் பகுதியில் ஆகும் செலவை ரயில்வே இலாகா ஏற்றுக்கொள்ளும். அப்ரோச் ரோடு செலவை சம்பந்தப்பட்ட அதாரிடிகள் தாம் ஏற்றுக் கொள்ளவேண்டும்.

SRI M. S. SELVARAJAN : Is there any phased programme for having such overbridges throughout the States ?

கனம் திரு. வெ. ராமைய்யா : பலவிடங்களில் மேம்பாலம் கட்டவேண்டுமென்று திட்டம் இருக்கிறது. நிதி நிலைக்குத் தகுந்த வகையில் இவை அவ்வப்போது பரிசீலனை செய்து எடுத்துக்கொள்ளப்படுகின்றன.

* 152 கேள்வி.—திரு. ர. ஜீவரத்தினம் : கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா :—

(அ) இராணிப்பேட்டை, கிருஷ்ணகிரி ரோடில் வேலூர் டவுன் ரயில்வே ஸ்டேஷன் அருகில் உள்ள ரயில் பாதையின் மீது மேம்பாலம் போடுவதற்காக சர்வே செய்யப்பட்டனவா ?

(இ) ஆம் எனில், வேலை எப்பொழுது மேற்கொள்ளப்படும் ?

கனம் திரு. வெ. ராமைய்யா : (அ)-வும் (இ)-வும்: வேலூர் நகராட்சியில் 46-ம் எண் தேசீய நெடுஞ்சாலையின் இராணிப்பேட்டை—கிருஷ்ணகிரி சாலையில் 87/1 மைலில் உள்ள இருப்புப்பாதை சாலை சந்திப்பிற்குப் பதிலாக, மேம்பாலம் கட்டும் வேலை நான்காவது ஐந்தாண்டுத் திட்ட வரைவில் சேர்க்கப்பட்டுள்ளது. நான்காவது திட்ட காலத்தில் நிறைவேற்ற வரிசைப்படுத்தியுள்ள முறைக்கேற்பவும், கிடைக்கும் நிதி வசதியைப் பொறுத்தும் அத்திட்ட காலத்தில் இதை நிறைவேற்றுவது பற்றி ஆலோசிக்கப்படும்.

திரு. ர. ஜீவரத்தினம் : வேலூர் நகரம் விரிவடைந்து கொண்டே வருகிறது. ஜனத்தொகையும் பெருகி வருகிறது. இங்கே மேம்பாலம் இல்லாத காரணத்தினால் போக்குவரத்து நெரிசல் அதிகமாக இருக்கிறது. நான்காவது திட்டத்தில் எடுத்துக்கொள்ளப்படும் என்றாலும் இதற்கு பிரையாரிடி கொடுத்து, நான்காவது திட்டத்தின் முதல் ஆண்டிலேயே இதை நிறைவேற்றிக்கொடுக்க அமைச்சர் ஆவன செய்வார்களா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : எந்த எந்த இடங்களில் மேம்பாலம் கட்டவேண்டும் என்பதை அந்த அந்த இடங்களில் உள்ள போக்குவரத்து நெரிசல், அவசியம், இவற்றைப் பார்த்து நிர்ணயிப்பார்கள். பிரையாரிடி கொடுப்பது என்பது ராஜ்ய மட்டத்தில்தான் பரிசீலனை செய்யப்பட்டு நிர்ணயிக்கப்படும்.